# பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண்.38

2019–2020

**எடப்பாடி கே. பழனிசாமி**
முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

# பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–4 |
| II. | தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள் | 4–6 |
| III. | அயல்நாட்டினர் சட்ட செயலாக்கம் | 6–7 |
| IV. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | 7–11 |
| V. | அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் | 12–30 |
| VI. | முன்னாள் படைவீரர்கள் நலன் | 30–53 |
| VII. | முதலமைச்சரின் தனிப்பிரிவு | 53–54 |

# மானியக் கோரிக்கை எண்.38

# பொதுத் துறை

# 2019–2020 ஆம் ஆண்டுக்கான

# கொள்கை விளக்கக் குறிப்பு

## I. முன்னுரை

மாநிலத்தின் பொது நிர்வாகம் தொடர்புடைய முக்கியப் பணிகள் பொதுத்துறையால் கையாளப்பட்டு வருகிறது. இத்துறையில் கவனிக்கப்படும் முக்கியமான பணிகள்:–

- ஆளுநரின் அலுவலகம் மற்றும் இல்லப்பராமரிப்பு தொடர்பான பணிகள்
- அமைச்சர்களின் பணி நியமனம் மற்றும் தொடர்பான பணிகள்
- முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் அலுவலகப் பணியமைப்பு தொடர்பான பணிகள்
- அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல்
- தகைசால் பெருமக்கள் மாநிலத்திற்கு வரும்போது மரபு சீர்முறை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தல்

- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக்குழு மற்றும் தென்மண்டலக் குழு உட்பட, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விபரங்கள் குறித்து கவனித்தல்
- இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களின் நிர்வாகப் பணிகளைக் கவனித்தல்
- மாவட்ட நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்ற சட்ட அலுவலர்கள் நியமனம்
- சட்டம் (ம) ஒழுங்கு பராமரித்தல்
- தேசிய பாதுகாப்புச் சட்டம், **1980** மற்றும் அந்நியச் செலாவணி பாதுகாப்பு மற்றும் கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், **1974**–ஐ (COFEPOSA) நடைமுறைப்படுத்துதல்
- மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டு தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளல்
- மனித உரிமைகள் குறித்த விபரங்கள், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், **1993**–ஐ

செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC) மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) சம்பந்தப்பட்ட பணிகள்

- இந்திய தரைப்படை, கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகிய இராணுவ துறைகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்
- அயல்நாட்டவர்களை பதிவு செய்தல், உரிய நுழைவிசைவுடன் வருகின்ற அயல்நாட்டினருக்கு தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதித்தல், சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல விழைபவர்களுக்கு வெளிச்செல்ல அனுமதித்தல் போன்றவற்றை அயல்நாட்டினர் சட்டம், **1946–**ன்படி செயல்படுத்துதல்
- மாநிலத்தில் வெவ்வேறு முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்
- வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்
- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தை நிர்வகித்தல்

- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நலப் பணிகளைச் செயல்படுத்துதல்
- முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்
- சென்னை, உதகமண்டலம் மற்றும் புதுதில்லியிலுள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிர்வகித்தல்
- அரசு விமான போக்குவரத்துப் பிரிவு சம்பந்தமான பணிகளை நிர்வகித்தல் மற்றும் கவனித்தல்
- பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்
- தலைமைச் செயலகக் கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்

## II. <u>தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்</u>

**2.** சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் விழா போன்ற இந்திய தேசிய விழாக்களை மாநில அளவில் நாட்டுப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஒருங்கிணைந்த ஏற்பாடுகளைப் பொதுத் துறை செய்கிறது. ஒவ்வொரு

ஆண்டும், குடியரசு நாள் விழா அன்று, சென்னை மெரினா கடற்கரையில் அலங்கார அணிவகுப்போடு, ஆடல், பாடல் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இத்துறை செய்கிறது. மேலும், சுதந்திரத் திருநாள் விழாவின் போதும், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைக்கும் நிகழ்ச்சிக்கான பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

**3.** மத்திய அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாளன்று, தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உறுதிமொழியேற்பு செய்து வைக்கும் நிகழ்ச்சியும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**4.** மாநில அரசின் விருதுகளான வீர தீரச் செயலுக்கு வழங்கப்படும் அண்ணா பதக்கம் மற்றும் மகளிருக்கான துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, ஆகியவற்றிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்

துறைச் செயலாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, விருது பெறுவோரைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

**5.** மேலும், மத்திய அரசால் வழங்கப்படும் விருதுகளான பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக் சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா, பொது நிருவாகத்தில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்களுக்காக அளிக்கப்படும் பிரதமர் விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதி பரிசு போன்ற விருதுகளுக்கும் இத்துறையின் மூலம் பரிந்துரைகள் நடுவண் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

## III. <u>அயல் நாட்டினர் சட்ட செயலாக்கம்</u>

**6.** அயல்நாட்டினர் தொடர்பான அனைத்து பொருளினங்களுக்கும் மாநில அளவில் பொதுத்துறை ஒரு முகமைத் துறையாக செயல்பட்டு வருகிறது.

**7.** நமது மாநிலத்தில் குடிநுழைவு இசைவு, அயல்நாட்டினர் பதிவு மற்றும் கண்காணிக்கும் முறை (Immigration, Visa, Foreigner's Registration and Tracking System) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால்

மாநிலத்திற்கு வருகைபுரியும் வெளிநாட்டினருடைய செயல்பாடுகளை காவல் துறையினர் கண்காணிக்க இம்முறை உதவியாக உள்ளது.

**8.** இவற்றுடன், பணி காரணமாகவோ அல்லது மேற்படிப்பிற்காகவோ வெளிநாடுகளுக்குச் செல்ல விழைபவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின் மீது அவற்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டபின் இத்துறையால் சான்றுறுதி அளிக்கப்படுகிறது. இச்சேவையில் ஒரு பகுதியாக சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கும் நடவடிக்கை மின்னணு பரிமாற்றம் (online) மூலம், பின்னூட்ட கருத்து தெரிவிக்கும் முறையுடன், நெறிமுறைப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கும் நடைமுறையில் கூடுதல் பொறுப்பு, குறைந்த செலவில் கையாளுவது, சிக்கலில்லாமல் விரைவான தீர்வு அளிப்பது ஆகிய அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது.

## IV. மாநில மனித உரிமைகள் ஆணையம்

**9.** “மனித உரிமைகள்” என்ற உள்ளார்ந்த கொள்கை மனித சமுதாயத்தின் மாண்பினை காப்பாற்றும்

அடிப்படையிலானது. பாகுபாடின்றி தனி மனிதர் உரிமைகளை பாதுகாக்கும் அரணாக விளங்கும் இக்கொள்கைகளை மனசாட்சியுடனும் மற்றும் சகோதர மனப்பான்மையுடனும் போற்றிப் பின்பற்ற வேண்டும்.

10. 1948–ஆம் ஆண்டு உலகப் பிரகடனத்தினைப் பின்பற்றி பல நாடுகள் மனித சமுதாயத்தில் தற்போது மனித உரிமைகளை செயல்படுத்துவதில் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளன. 1948–ஆம் ஆண்டு உலகப் பிரகடனத்தினை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்காற்றிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இதைத் தொடர்ந்து இந்தியாவில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 28.09.1993 அன்று நிறைவேற்றப்பட்டது. சட்டப்பிரிவு 2(d)–ன்படி மனித உரிமைகள் என்பது அரசியலமைப்பு உறுதிப்படுத்தும் அல்லது இந்திய நீதி மன்றங்களால் அமலாக்கக்கூடிய சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையிலான, தனி நபரது வாழ்வுரிமை, சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகிய உரிமைகளைக் குறிக்கின்றது. அவ்வுரிமைகளை நிலைநாட்டிடும் பொருட்டு, சட்டப்பிரிவு 3 மற்றும் 21–ன் கீழ் தேசிய மனித உரிமைகள் ஆணையம் மத்தியிலும், மாநில மனித உரிமைகள் ஆணையம் மாநிலத்திலும் நிறுவப்பட்டது.

**11.** மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், **1993–**ன் திருத்தச் சட்டம் **43/2006–**ன்படி மாநில மனித உரிமைகள் ஆணையம், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்தவரை தலைவராகவும், உயர்நீதிமன்ற நீதிபதி பதவி வகிப்பவர் அல்லது வகித்தவர் அல்லது மாவட்ட நீதிபதியாக ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தவர் ஒரு உறுப்பினராகவும், மற்றொரு உறுப்பினர் மனித உரிமைகள் பற்றி அறிந்தவர் மற்றும் அனுபவப்பூர்வமாக உணர்ந்தவர் ஆக மூன்று பேர்களைக் கொண்டு அமைந்துள்ளது. மேலும், நீதியரசர் திருமதி. ட்டி.மீனாகுமாரி (மேகாலயா உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி) அவர்கள் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக **24.11.2014** முதல் செயல்படுகிறார். **02.11.2017** முதல் திரு. து.ஜெயச்சந்திரன், மாவட்ட நீதிபதி (ஓய்வு) அவர்களும், **23.10.2017** முதல் முனைவர் ஆ.சித்தரஞ்ஜன் மோகன்தாஸ், இஆப. (ஓய்வு) அவர்களும் இவ்வாணையத்தின் உறுப்பினர்களாக செயல்படுகிறார்கள். இவ்வாணையம் சட்டப்பிரிவு, புலனாய்வுப்பிரிவு, நிர்வாகப்பிரிவு ஆகியவைகளை தன்னகத்தே கொண்டு செயல்படுகிறது. மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு மனித உரிமை மீறல் புகார்களை

எந்த மொழியிலும் எழுதி அனுப்பலாம். கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. சம்பந்தப்பட்ட நபரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரும் பாதிப்பு குறித்த புகார்களை ஆணையத்துக்கு எழுதி அனுப்பலாம். அவ்வாறு பெறப்படும் புகார்கள் மற்றும் ஆணையத்தின் கவனத்துக்கு வரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய புகார்கள் மீது ஆணையம் தானே விசாரணை மேற்கொள்ளலாம். பொது ஊழியர்களால் ஏற்படும் மனித உரிமை மீறல்கள், அவர்கள் அவற்றுக்கு உடந்தையாக இருத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களை தடுக்கத் தவறுதல் பற்றிய புகார்களின் மீது விசாரணை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட நபர் அல்லது அவர் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கலாம் என கருதும் புகார்களின் மீது நிவாரணம் வழங்கிட அரசுக்கு அல்லது அதிகார அமைப்பிற்கு ஆணையம் பரிந்துரை செய்கிறது. ஆணையத்தின் பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப்பட்டு, அதனை ஒரு மாத காலத்திற்குள் அரசு நிறைவேற்றிடவும், அது பற்றிய அறிக்கை அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. சம்பந்தப்பட்ட துறையால் கால நீட்டிப்பு கேட்டுக் கொள்ளப்பட்டால், ஆணையத்தால் மேலும் கால நீட்டிப்பு வழங்கப்படுகிறது.

**12.** மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட பல மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் 17.04.1997 முதல் செயல்பட்டு வருகிறது. 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் டிசம்பர் திங்கள், 2018 வரை இவ்வாணையத்திற்கு 1,89,947 புகார்கள் வரப்பெற்று, அவற்றில் 1,74,766 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

**13.** மனித உரிமைகள் குறித்த கல்வி, சட்டம், உளவியல் மற்றும் குற்றவியல் போன்ற பாடங்களை எடுத்துப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக இவ்வாணையத்தில் உள்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அம்மாணவர்கள் இவ்வாணையத்தைக் குறித்தும், மனித உரிமைகள் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

**14.** மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் பற்றிய கூட்டங்கள் மற்றும் பயிலரங்குகளை நடத்தி பொது ஊழியர்களுக்கு மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை ஆணையம் ஏற்படுத்துகிறது. மேலும் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 10–ஆம் தேதி சர்வதேச மனித உரிமை நாளாக கொண்டாடப்படுகிறது.

## V. <u>அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்</u>

**15.** பொதுத் துறை, தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன், தாயகம் திரும்பியோர் நலன் மற்றும் தமிழ்நாட்டிற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலன் தொடர்பான பணிகளை அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நல ஆணையரகம் மூலம் மேற்கொண்டு வருகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவது மற்றும் அவர்களின் நலன் பேணுவது இவ்வாணையரகத்தின் முதன்மையான பணியாகும். இலங்கையில் **1983**–ல் ஏற்பட்ட இனக்கலவரத்திற்குப் பிறகு **3,04,269** இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். **01.04.2019** தேதிய புள்ளி விபரங்களின்படி, **18,871** குடும்பங்களைச் சேர்ந்த **60,438** நபர்கள் மாநிலத்தில் உள்ள **25** மாவட்டங்களில் (திருச்சிராப்பள்ளியில் உள்ள ஒரு சிறப்பு முகாம் உள்ளிட்ட) **107** முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதைத் தவிர, **31.03.2019** அன்றுள்ளபடி, **34,684** இலங்கைத் தமிழ் அகதிகள், முகாம்களுக்கு வெளியில் வசித்து வருகின்றனர். முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வகையான நிவாரண

உதவிகள், மத்திய மற்றும் மாநில அரசின் வகைப்பாடு நிர்ணயங்களின்படி வழங்கப்படுகிறது.

<u>முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்டங்கள்</u>

**16.** முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் கண்ணியம் மற்றும் பாதுகாப்புடன் தங்கள் வாழ்வினை மேற்கொள்ள வழிவகை செய்யும் விதமாக, மத்திய அரசு வழங்கி வரும் உதவிகளோடு கூடுதலாக தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத்திட்ட உதவிகளும், ஜுன், 2011 முதல் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

<u>பணக்கொடை, உணவு மற்றும் இருப்பிட வசதிகள்</u>

**17.** முகாம்வாழ் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஆடை, பாய், போர்வை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி, உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கீழ்க்கண்டவாறு **04.08.2011** முதல் உயர்த்தப்பட்ட வீதத்தில் மாதாந்திர பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது :

| | | |
|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | ரூ.1,000/– |
| 2. | ஒவ்வொரு கூடுதல் பெரியவர் (12 வயது மற்றும் அதற்கு மேல்) | ரூ. 750/– |
| 3. | சிறியவர்கள் (12 வயதிற்குக் கீழ்) | ரூ. 400/– |

**18.** இலங்கைத் தமிழ் அகதிகள் குடும்பத்திற்கு அரிசி, சர்க்கரை, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் பொது விநியோகத் திட்டம் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

**2018–2019–**ஆம் ஆண்டில், சுகாதாரத்தை மேம்படுத்த **ரூ.34,59,000/–** ஒதுக்கீடு செய்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய **ரூ.28,38,000/–** நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

<u>கல்வி உதவி</u>

**19.** அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு **12–**ம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. இவர்களுக்கு, பிற மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று சீருடைகள்,

மதிய உணவு, நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், பேருந்துப் பயணச்சீட்டு வழங்கப்படுகிறது. மேலும், மடிக்கணினிகள் விலையின்றி வழங்கப்படுகின்றன.

**20.** இத்துடன், இலங்கைத் தமிழ் மாணவர்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், தொழில் சார்ந்த கல்லூரிகளிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் மற்றும் பல்கலைக் கழகங்களிலும் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில், பொதுப்பிரிவின் கீழ் கலந்தாய்வில் கலந்து கொண்டு, சேர்ந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மற்ற மாணவர்களைப் போல அனைத்து விதமான கல்வி உதவிகளும் பெற தகுதியுடையவர்கள். மேலும், தமிழ்நாடு அரசால் நடத்தப்படும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட (ம) பழங்குடியினர் நல விடுதிகளில், தலா ஐந்து இடங்கள் ஒதுக்கீடு செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டு, இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியுள்ள மாணவர்கள் தங்கி, தங்களது படிப்பினைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது. மார்ச், 2019 வரை, 49 மாணவர்கள் அரசு விடுதிகளில் தங்கியுள்ளனர்.

**21.** இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களில் வசித்து வரும் மாணவர்களுக்கு உயர் கல்வி தொடர கல்வி உதவித்தொகை உயர்த்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பாடப் பிரிவுகளும் உள்ளடங்கியவாறு விரிவாக்கம் செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.644, பொது (மறுவாழ்வு–2)த் துறை, நாள் 28.08.2018–ன்படி கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது :

| வரிசை எண் | படிப்பு | தற்போது வழங்கப்படும் தொகை (ரூ) | 2018–2019–ல் உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | தொழில்நுட்ப பட்டயப்படிப்பு | 850/– | 2500/– |
| 2. | இளநிலை கலை மற்றும் அறிவியல் | 1200/– & 1250/– | 3000/– |
| 3. | முதுநிலை கலை மற்றும் அறிவியல் | 1330/– & 1650/– | 4000/– |
| 4. | இளநிலை தொழில் சார்ந்த படிப்புகள் | 860/– & 4700/– | 5000/– |
| 5. | முதுநிலை தொழில் சார்ந்த படிப்புகள் | –– | 6000/– |

இத்திட்டத்தின் கீழ், 2018–2019–ஆம் ஆண்டில், 988 மாணவ / மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக

ரூ.**33,10,000/–** வழங்கி, அரசாணை (நிலை) எண்.**399**, பொது (மறுவாழ்வு–2)த் துறை, நாள் **28.06.2019**–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

<u>பிற நலத்திட்டங்கள் : பயிற்சி</u>

**22.** தையல் பயிற்சி பெற்ற ஏழைப் பெண்களுக்கு, விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகின்றது. பெண்களை ஊக்குவிக்கும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூ.**10,000/–** வீதம் சுழல் நிதி "ஒருமுறை மானியமாக" **2014–2015**–ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

<u>சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் துயர்துடைப்பு</u>

**23.** மாதாந்திர பணக்கொடை மட்டுமில்லாமல், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் மணமாகாத பெண்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.**1,000/–** வழங்கப்படுகிறது. **2018–2019**–ல், **4,058** நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு, இறுதிச் சடங்குகள் செய்திட வழங்கப்பட்டு வந்த நிதியுதவி இந்த அரசால் ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இதுவரை, 322 இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, விபத்தின் காரணமாக இறப்பு ஏற்படின், அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூ.15,000/–லிருந்து ரூ.25,000/–ஆக 2012–2013–ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது. 2018–2019–ல், 8 குடும்பத்தினர் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

<u>மகளிர் மற்றும் பெண்குழந்தைகள் நலன்:</u>

<u>மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டம்:</u>

**24.** இத்திட்டம் இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மகளிருக்காக நீட்டிக்கப்பட்டுள்ளது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ், பட்டம் / பட்டயம் பெற்ற பெண்களுக்கு

ரூ.50,000/– உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் திருமாங்கல்யத்திற்கான 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு வரை படித்த இதர பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் திருமாங்கல்யத்திற்கான 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2018–2019–ல், 43 மகளிர் பயனடைந்துள்ளனர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் மற்றும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்:

25. கருவுற்ற பெண்களுக்கு மகப்பேறு உதவியாக ரூ.18,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2018–2019–ல் 379 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

அதேபோன்று, முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒரே ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பத்திற்கு ரூ.50,000/– அப்பெண் குழந்தையின் பெயரில் 20 வருடங்களுக்கு வைப்பீடு செய்யப்படுகிறது. இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/– வீதம் ஒவ்வொரு குழந்தையின் மீதும் 20 வருடங்களுக்கு அப்பெண் குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2018–2019–ல், 3** பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

<u>சிறப்பு முகாம்</u>

**26.** தற்போது தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு சிறப்பு முகாம் உள்ளது. இம்முகாமில் காவல்துறையின் எதிர்மறையான குறிப்புகள் கொண்ட, மாநிலத்திற்குள் சுதந்திரமாக அனுமதிக்க இயலாத குற்றப் பின்னணி உடைய இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். **31.03.2019** நிலவரப்படி, **31** இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம் **1946**–பிரிவு **3(2)(இ)**–ன் கீழ் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய நடமாட்டம் சிறப்பு முகாம்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இவர்களுக்கு தினமும் ரூ.**100/–** மதிப்பில் சமைத்த உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

<u>அகதிகள் நாடு திரும்புதல்</u>

**27.** தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் அவர்தம் தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கை அகதிகளுக்கு "வெளிச்செல்" அனுமதி, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. "வெளிச்செல்" அனுமதி,

விரைவாக வழங்குவதற்கு எளிய நடைமுறை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையர் அலுவலகத்தின் உதவியுடன் (UNHCR), கீழ்க்காணும் அகதிகள் இலங்கைக்கு திரும்பியுள்ளனர் :

| வரிசை எண் | ஆண்டு | அகதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2014 | 396 |
| 2. | 2015 | 452 |
| 3. | 2016 | 852 |
| 4 | 2017 | 1520 |
| 5. | 2018 | 1283 |
| 6. | 2019 (மார்ச் வரை) | 212 |

முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள்

**28. 31.03.2019**–ன் நிலவரப்படி **13,684** குடும்பங்களைச் சேர்ந்த **34,684** இலங்கைத் தமிழ் அகதிகள், தமிழ்நாட்டில் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்து கொண்டு வசித்து வருகின்றனர். இலங்கைத் தமிழருக்கான விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத்

தொகையானது மத்திய அரசால் கணிசமாக திருத்தியமைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களில் சிலர் அதிகமான தொகை செலுத்தி மீள இலங்கைக்குத் திரும்ப இயலாத நிலையில் உள்ளனர். தற்போது தமிழ்நாடு அரசின் கருத்துருவின் பேரில், **09.01.2015**–க்கு முன்னர் இந்தியாவிற்கு வந்து, சுய விருப்பத்தின் பேரில் இலங்கைக்கு திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையின் மீது, விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபாரதத் தொகையினை இனம் வாரியாக தள்ளுபடி செய்ய மாநில அரசுக்கு மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி விசா மற்றும் அபராதத் தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது. **31.03.2019** நிலவரப்படி, **587** குடும்பங்களைச் சார்ந்த **1,081** நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

<u>வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்</u>

**29.** தமிழர்கள் வணிகத்தின் பொருட்டும், படையெடுப்பின் பொருட்டும், குடியமர்வின் பொருட்டும் தொன்று தொட்ட காலம் முதல், அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். வருடந்தோறும், பொருளாதார மேம்பாடு பெற, அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்வாதாரத்திற்காகவும்,

பணி நிமித்தம் காரணமாகவும், மேற்கல்வி காரணமாகவும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் தங்கி இருக்கும்போது எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி அழைத்து வரவும், அவர்களுக்குச் சேர வேண்டிய பணப் பயன்களைப் பெற்றுத் தரவும், வெளிநாடுகளில் இறந்தவர்களின் உடல்களை இந்தியா கொண்டு வரவும், அந்நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களின் உதவியுடன் உரிய நடவடிக்கைகள் இத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ''மாவட்ட நல அலுவலர் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)'' ஆகவும் மற்றும் ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின் கீழ் உள்ள பிரிவானது ''மாவட்ட நல மையம் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)'' ஆகவும் செயல்பட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**30.** புலம் பெயரும் தொழிலாளர்களுக்கு அவர்கள் வெளிநாடுகளுக்கு புறப்படும் முன் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்த முன் பயண புத்தாக்கப் பயிற்சி / பயிற்றுநர்களுக்கான பயிற்சிப் பட்டறையானது, மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும்

தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைப்புடன் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் **21.02.2019** மற்றும் **22.02.2019** ஆகிய இரு நாட்கள் நடத்தப்பட்டது. புலம் பெயர்தல் தொடர்பான புலம் பெயர்தலுக்கான இந்திய மையம் மூலம் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருந்த புத்தகங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு, பயிற்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு, பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டது.

**2018–2019**–ஆம் நிதியாண்டில் ஈரான், மலேசியா, கத்தார், சவுதி அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து துயருற்று இந்தியா திரும்பிட கோரிய **91** தமிழர்களை சென்னை விமான நிலையத்தில் வரவேற்று அவர்களை சொந்த ஊர்களுக்கு திருப்பி அனுப்பிட இத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், வெளிநாடுகளில் இறந்த **70** வெளிநாடுவாழ் தமிழர்களின் பூத உடல்களை சுகாதாரத் துறையின் அமரர் ஊர்தி மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், வெளிநாடுகளில் மருத்துவ சிகிச்சையில் இருந்து நாடு திரும்பிய **3** நபர்களை வரவேற்று, அவர்களது சொந்த விருப்பத்திற்கு ஏற்ப உரிய மருத்துவமனைகளில் சேர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

சுழல் நிதி:

**31.** வெளிநாடு வாழ் தமிழர்கள் நலனுக்கு செலவிடுவதற்காக சுழல் நிதியாக ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை அரசு பின்னர் ஈடு செய்கின்றது. 2018–2019–ஆம் வருடம் இச்சுழல் நிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனுக்காக செலவிடப்பட்டது :

| வரிசை எண். | குறிப்பு | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஷேக் அலாவுதீன் இறந்ததால் அவரது பூத உடலை தாயகம் கொண்டு வர செலவிடப்பட்ட தொகையினை திரும்பிச் செலுத்தியமைக்காக இந்திய தூதரகம், சைனா வங்கி கணக்கில் செலுத்தியது. | 3,70,000/– |
| 2 | ஈரான் நாட்டில் மீன்பிடி தொழிலுக்காக கப்பலில் பணி செய்து துன்புற்ற, தமிழ் நாட்டைச் சேர்ந்த 21 மீனவர்களை மீட்டு, சொந்த ஊர் திரும்புவதற்கு செலவிடப்பட்ட தொகை | 2,00,000/– |
| 3 | தமிழ்நாட்டைச் சேர்ந்த 49 தொழிலாளர்களை மலேசியாவிலிருந்து மீட்டு, சொந்த ஊர் திரும்புவதற்கு செலவிடப்பட்ட தொகை | 6,12,180/– |
| 4 | ஈரான் நாட்டில், டெஹ்ரானில் துன்புற்ற 3 தமிழக மீனவர்களை மீட்டு சொந்த ஊர் திரும்புவதற்கு செலவிடப்பட்ட தொகை | 1,47,210/– |

| | | |
|---|---|---|
| 5 | நேபாள நாட்டில் இறந்த, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த சங்கர் என்பவரின் பூத உடலை சொந்த ஊர் கொண்டு வர செலவிடப்பட்ட தொகை | 87,314/– |
| 6 | கத்தார் நாட்டில் துன்புற்ற 5 தமிழக மீனவர்களை மீட்டு, விமானம் மூலம் சொந்த ஊர் திரும்புவதற்கு தமிழ்நாடு இல்லம், டில்லி மூலம் செலவிடப்பட்ட தொகையினை திருப்பிச் செலுத்தியமைக்காக | 54,360/– |
| | மொத்தம் | **14,71,064/–** |

<u>தாயகம் திரும்பியோர் நலன்</u>

**32.** இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **4,61,639** நபர்கள் இலங்கையிலிருந்தும், சுமார் **1,44,445** நபர்கள் பர்மாவிலிருந்தும் மற்றும் **2,055** நபர்கள் வியட்நாமிலிருந்தும் இந்தியாவிற்கு திரும்பி வந்துள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் தமிழ்நாட்டிலும், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் குடியமர்ந்துள்ளனர். தாயகம் திரும்பியோருக்கு முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் **1,000** வீடுகள் ஒதுக்கீடு செய்து **2018–2019**–இல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.**547**, பொது (ம.வா.**3**)த் துறை, நாள் **23.07.2018**ல்

ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது.

**<u>ரெப்கோ வங்கி</u>**

**33.** ரெப்கோ வங்கி, (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி) இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக மத்திய அரசால் நிறுவப்பட்டு, மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய **4** தென் மாநில அரசுகளின் பங்கு முதலீடு கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கி முதன் முதலில் மெட்ராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டம், **53/1961**–ன் கீழ் **09.09.1969** அன்று பதிவு செய்யப்பட்டது. வங்கியின் நடவடிக்கைகள் **19.11.1969** முதல் துவங்கப்பட்டது. தற்பொழுது இந்த வங்கி, பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டம் **2002**–ன் கீழ் பதிவுபெற்று செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி மத்திய உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் **108** கிளைகளைக் கொண்டு இவ்வங்கி இயங்கி வருகிறது.

**31.03.2019** அன்று வங்கியின் மூலதனத்தின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| **வரிசை எண்.** | **முதலீட்டாளர்கள்** | **மூலதன தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | **சதவீதம்** |
|---|---|---|---|
| 1. | இந்திய அரசு | 7632.00 | 49.46 |
| 2. | தமிழ்நாடு அரசு | 713.00 | 4.62 |
| 3. | ஆந்திரப் பிரதேச அரசு | 104.77 | 0.68 |
| 4. | தெலுங்கானா அரசு | 74.88 | 0.49 |
| 5. | கேரளா அரசு | 61.16 | 0.40 |
| 6. | கர்நாடக அரசு | 17.47 | 0.11 |
| 7. | தாயகம் திரும்பியோர் | 6827.63 | 44.24 |
| | **மொத்தம்** | **15430.91** | **100.00** |

**34.** தாயகம் திரும்பியோரது மறுவாழ்விற்கான உதவிகளையும், வேலை வாய்ப்பிற்கான பல திட்டங்களையும் ரெப்கோ வங்கியின் துணை கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி உள்ளது. தேயிலை, ரப்பர், சின்கோனா, கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தொழிற்கூடங்கள் அமைத்து அவர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது.

**35.** இவ்வங்கி தாயகம் திரும்பியோர்க்கு கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவித் தொகை, குறைந்த வட்டியில் கடன் திட்டங்கள், குழு காப்பீட்டுத் திட்டம், இழப்பீட்டுத் தொகை (இறுதிச் சடங்கிற்காக), ஒவ்வொரு ஆண்டும் 10 மாணவர்களுக்கான உயர்கல்வி செலவு ஏற்பு, பழுதடைந்த வீடுகளின் சீரமைப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு இருக்கை அளித்தல் போன்ற பல நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதுவரை சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தாயகம் திரும்பியோர் இந்த நலத்திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

தாயகம் திரும்பியோருக்கு ரெப்கோ வங்கியின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் செய்யப்பட்ட உதவித் தொகைகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வரிசை எண். | வருடம் | உதவித் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 2014–2015 | 303.00 |
| 2. | 2015–2016 | 330.00 |
| 3. | 2016–2017 | 470.00 |
| 4. | 2017–2018 | 484.00 |
| 5. | 2018–2019 | 618.00 |

## VI. முன்னாள் படைவீரர்கள் நலன்

**36.** இந்திய இராணுவத்திற்கு இளைஞர்களை பெருமளவில் அனுப்பி வைப்பதில் தமிழ்நாடு எப்போதும் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. அர்ப்பணிப்பு உணர்வுடனும், நாட்டுப் பற்றுடனும் கடமையாற்றும் படைவீரர்கள் பாராட்டப்படுவதுடன், அவர்களின் வீரதீரச் செயலுக்காக கௌரவிக்கப்படுகிறார்கள். தங்களது குடும்பத்தினருடன் இல்லாத போது அவர்களுடைய குடும்பங்களைக் காப்பதும், நடுத்தர வயதில் அவர்கள்

பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் அவர்களது சொந்த ஊரில் ஓய்வு காலத்தை அமைதியாகவும், ஆக்கபூர்வமாகவும் வாழ்ந்திட ஆவன செய்ய வேண்டியதும் அவசியமாகும். ஓய்வு பெற்ற படைவீரர்களுக்கு மறுவேலைவாய்ப்பு அளித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் மற்றும் படைவீரர்கள் குடும்பத்தின் இன்னல்களைப் போக்கும் ஒரே நோக்கத்திற்காக முன்னாள் படைவீரர் நல இயக்ககம் **1974–**ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, பொதுத் துறையின் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**37.** ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏறக்குறைய **1,400** படைவீரர்கள் படைப்பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர் மற்றும் படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினரின் நலனை உயர்த்திடும் பொருட்டு முன்னாள் படைவீரர் நல இயக்ககம் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து வருகிறது. முன்னாள் படைவீரர் நலத் துறையில் **1,79,895** முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் விதவை மனைவியர் பதிவு செய்துள்ளனர். இவ்வியக்ககம், **30** மாவட்ட அலுவலகங்கள் மூலம் இவர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவு செய்கிறது. முன்னாள் படைவீரர்களின் திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம்

தொடர்பான மானியங்கள், முன்னாள் படைவீரர்கள் சிறார்களுக்கான கல்வி மானியம், பயிற்சி திட்டங்கள் போன்றவற்றிற்கு கொடி நாள் மூலம் திரட்டப்படும் நிதியிலிருந்து, முன்னாள் படைவீரர் நலத்துறை செலவினங்களை மேற்கொள்கிறது.

படைவீரர் கொடிநாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரிச்சட்டம், 1961–ன் பிரிவு 80–G (5) (vi)–ன் கீழ் வரிவிதிப்பு ஆண்டு 2019–2020 முதல் வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் தலையாய திட்டங்கள் கீழ்வருமாறு :

அ. நிதியுதவிகள் வழங்குதல்

ஆ. மறு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துதல்

இ. பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல்

ஈ. கல்வி நிலையங்களில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடு

உ. சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி மூலமாக பல்வேறு வகையான நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**38.** மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு கொடி நாள் நிதி நிலை ஆளுகைக் குழு மற்றும் தொகுப்பு நிதி ஆளுகைக் குழு நிர்வகிக்கப்படுகிறது. முன்னாள் படைவீரர் நலத் துறைக்கு பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு படைவீரர் நல வாரியக் குழுவானது நிர்வகிக்கப்படுகிறது.

<u>நிதி உதவிகள் / மானியங்கள்</u>

**39.** உலகப்போரில் பணியாற்றிய முன்னாள் படைவீரர்களுக்கு ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, முதியோர் ஒய்வூதியம், முன்னாள் படைவீரர் மற்றும் குடும்பத்தினருக்கு பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவி, முன்னாள் படைவீரரின் மகளுக்கு திருமண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி மற்றும் செயற்கை உபகரணங்கள் நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு நிதியுதவிகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

2018–2019–ஆம் ஆண்டில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து பல்வேறு மானியங்களாக 11,557 முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு ரூ.26,09,35,193/– வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு நிதியிலிருந்து போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெறப்படும் வங்கி கடன்களுக்கு வட்டி மானியம் மற்றும் வீட்டு மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்வி மானியம் ரூ.500/–லிருந்து ரூ.25,000/– வரை முதலாம் வகுப்பிலிருந்து முதுகலைக் கல்வி / தொழில் நுட்பக்கல்வி வரையில் வழங்கப்படுகிறது.

2018–2019–ஆம் ஆண்டில் 2,835 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ.4,92,68,659/– மானியங்களாக வழங்கப்பட்டுள்ளது.

**40.** இரண்டாம் உலகப் போரில் பங்குபெற்ற முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி 2018–2019–ஆம் ஆண்டில் ரூ.6,000/–ஆகவும், விதவைகளுக்கு ரூ.3,000/–ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

**3,885** முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவைகளுக்கு ரூ.**14.56** கோடி செலவில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள் கீழ்வருமாறு :

| வரிசை எண். | நிதியுதவியின் பெயர் | தற்போது வழங்கப்படும் தொகை (மாதந்தோறும்) (ரூ) |
|---|---|---|
| 1. | இரண்டாம் உலகப்போர் (முன்னாள் படைவீரர்) நிதியுதவி | 6,000 |
| 2. | உலகப்போர் (விதவையர்) நிதியுதவி | 3,000 |
| 3. | முதியோர் நிதியுதவி | 2,500 |
| 4. | பக்கவாத நிவாரணம் / காசநோயாளிகளுக்கான நிவாரணம் / மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரண நிதியுதவி | 2,500 |
| 5. | தொழுநோய் நிவாரணம் / பார்வையற்றோருக்கான நிவாரணம் / புற்றுநோய் நிவாரணம் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான நிவாரண நிதியுதவி | 3,000 |

| வரிசை எண். | <u>இதர உதவிகள் (நிகழ்வுகளில்)</u> | ஒரு முறை நிதி உதவி (ரூ) |
|---|---|---|
| 1. | திருமண மானியம் | 20,000 |
| 2. | ஈமச்சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்கள்) | 10,000 |
| 3 | ஈமச்சடங்கு மானியம் (விதவைகள்) | 5,000 |

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும், இராணுவப் பணி பயிற்சி காலத்தின்போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும், கீழ்க்கண்டவாறு தொகுப்பு மானியம் (Lumpsum Grant) வழங்கப்பட்டு வருகிறது :

| வரிசை எண். | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | முப்படையில் நிரந்தர படைத் துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் (NDA / IMA / Naval / Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 1,00,000 |

| வரிசை எண். | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 2. | முப்படையில் குறுகியகால படைத்துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காக தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 50,000 |
| 3. | இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காக தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 25,000 |

<u>வீர தீரச் செயல்களுக்கான விருது மற்றும் போற்றத்தக்க செயல்களுக்கான பண முடிப்பு மற்றும் படைவீரர்களின் பெற்றோர்களுக்கான போர்ப் பணி ஊக்க மானியம்</u>

**41.** வீர தீரச் செயல்களுக்கான வீரப் பதக்கங்கள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு அரசு நிதியிலிருந்து பணமுடிப்பு வழங்கப்படுகிறது. கீழ்க்கண்டவாறு இந்நிதியுதவியினை அரசு உயர்த்தியுள்ளது :

## வீர விருதுகள்/ பதக்கங்கள் பெறுவோருக்கான பணமுடிப்பு

| வரிசை எண். | விருது பெயர் | 04.02.2016 முதல் உயர்த்தப்பட்ட பணமுடிப்பு (ரூ.) |
|---|---|---|
| 1. | பரம் வீர் சக்ரா | 25,00,000 |
| 2. | அசோக் சக்ரா | 20,00,000 |
| 3. | மகா வீர் சக்ரா | 15,00,000 |
| 4. | கீர்த்தி சக்ரா | 12,00,000 |
| 5. | வீர் சக்ரா | 10,00,000 |
| 6. | சௌரிய சக்ரா | 8,00,000 |
| 7. | சேனா / நாவோ / வாயு சேனா பதக்கம் (வீர விருதுகள்) | 1,00,000 |
| 8. | மென்சன்–இன்–டெஸ்பேட்ச்சஸ் | 15,000 |

## போற்றத்தக்க சேவைப் பதக்கங்கள் பெறுவோருக்கான பணமுடிப்பு

| வரிசை எண். | விருது பெயர் | 04.02.2016 முதல் உயர்த்தப்பட்ட பணமுடிப்பு (ரூ.) |
|---|---|---|
| 1. | பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம் | 75,000 |
| 2. | சர்வோத்தம் யுத் சேவா பதக்கம் | 75,000 |

| | | |
|---|---|---|
| 3. | உத்தம் யுத் சேவா பதக்கம் | 40,000 |
| 4. | அதி விஷிஷ்ட் சேவா பதக்கம் | 40,000 |
| 5. | யுத் சேவா பதக்கம் | 25,000 |
| 6. | விஷிஷ்ட் சேவா பதக்கம் | 25,000 |
| 7. | சேனா பதக்கம் | 25,000 |

2018–2019–ஆம் ஆண்டில் வீரப் பதக்கம் மற்றும் போற்றத்தக்க பணிக்காக பதக்கம் பெற்ற 7 நபர்களுக்கு ரூ.4,33,000/– பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தனது மகன் / மகளை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில் தனது ஒரே மகனை / மகளை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஒட்டு மொத்தமாக ரூ.20,000/– மற்றும் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன் / மகளை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஒட்டு மொத்தமாக ரூ.25,000/– மற்றும் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படுகிறது. 2018–2019–ஆம் ஆண்டில் போர்ப்பணி ஊக்க மானியமாக 425 பெற்றோர்களுக்கு ரூ.99,35,400/– வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

போரில் உயிர் நீத்தோருக்கான கருணைத் தொகை

**42.** போரில், தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் அல்லது குடிமைப் பணி நிர்வாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின்போது உயிரிழந்த / ஊனமுற்ற படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.**20** இலட்சம் வரை கருணைத் தொகை தமிழக அரசினால் வழங்கப்படுகிறது**.** மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப் படையினருக்கும் **(**Central Reserve Police Force, Central Industrial Security Force, Indo-Tibetan Border Force, Border Security Force and Sashastra Seema Bal) கருணைத்தொகை நீட்டித்து வழங்கப்பட்டு வருகிறது**.** மேலும் **2018–2019** முதல் இந்தியக் கடலோரக் காவல் படையினருக்கும் கருணைத் தொகை வழங்குவது அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது**. 2018–2019–**ம் நிதியாண்டில் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்த படைவீரர்களின் வாரிசுதாரர்கள் **3** நபர்களுக்கு கருணைத் தொகையாக தலா ரூ.**20** இலட்சம் கார்கில் படை வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது**.** இதனைத் தவிர, புல்வாமா தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்த இரண்டு துணை இராணுவ

படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக தலா ரூ.20 இலட்சம் அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது மற்றும் இவ்விரண்டு வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளும் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

<u>இரட்டை குடும்ப ஓய்வூதியம்</u>

**43.** இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்று மறு வேலைவாய்ப்பின் மூலம் தமிழ்நாடு அரசின் குடிமைப் பணியில் பணியாற்றி ஓய்வூதியம் பெற்ற முன்னாள் படைவீரரின் வாரிசுதாரருக்கு, ஏற்கனவே இராணுவ குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு, இரட்டை குடும்ப ஓய்வூதியம் 02.09.2016 முதல் வழங்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தற்போது இரட்டை குடும்ப ஓய்வூதியம் தொடர்பாக 77 விண்ணப்பதாரர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 48 விண்ணப்பதாரர்களுக்கு இரட்டை குடும்ப ஓய்வூதியம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 29 விண்ணப்பங்கள் கணக்காயர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

மறு வேலைவாய்ப்பு அளித்தல்

**44.** முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக் காலத்தினை மீதமாகக் கொண்டு படைப்பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் கீழ்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளது :

| | | |
|---|---|---|
| 1. | பிரிவு "சி" காலிப் பணியிடங்கள் | 5% |
| 2. | அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் காலிப் பணியிடங்கள் | 10% |
| 3. | வனக்காவலர் காலிப் பணியிடங்கள் | 10% |
| 4. | வனப்பாதுகாவலர் காலிப் பணியிடங்கள் | 5% |
| 5. | தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவு காவலர்கள் காலிப் பணியிடங்கள் | 25% |
| 6. | சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" காலிப் பணியிடங்கள் | 5% |
| 7. | கால்நடை ஆய்வாளர் | 5% |

**45.** முன்னாள் படைவீரருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு பரிந்துரை செய்யும் கூட்டு பரிந்துரை

அதிகாரத்தை, முன்னாள் படைவீரர் நலத் துறைக்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. **2018–2019–**ல் மாநில அரசின் பல்வேறு துறைகள் / மத்திய அரசு / அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களில் குரூப் 'சி' பிரிவில் **509** நபர்களும், குரூப் 'டி' பிரிவில் **63** நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

<u>இராணுவப் பணி சிறப்பு சான்றிதழை பட்டதாரி கல்விக்கு இணையாகக் கருதுதல்</u>

**46.** பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று, இராணுவத்தில் **15** ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு சிவில் பிரிவில் பல்கலைக் கழகத்தினரால் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்கு நிகரான கல்வித் தகுதியாகக் கருதிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாணையினால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசு நிறுவனங்களில் பட்டப்படிப்பு தகுதியுடைய குரூப் ''சி'' பிரிவில் ஒதுக்கீடு பணியிடங்களுக்கு முன்னாள் படைவீரர்கள் தேர்வு பெற வழிவகை செய்கிறது.

கோயில் பாதுகாப்புப் படை

**47.** தமிழ்நாட்டில் கோயில்களிலுள்ள விலை மதிக்க முடியாத சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை பாதுகாப்பதற்காக கோயில் பாதுகாப்புப் படை **1992**–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கோயில் பாதுகாப்புப் படையில் சிறப்பு காவல் அலுவலர்களாகப் பணிபுரிய முன்னாள் படைவீரர்களுக்கு **62** வயது வரை வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதந்தோறும் ரூ.**5,000/–** தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது. **2018–2019**–ஆம் ஆண்டில் இதன் மூலம் **1,090** முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கருணை அடிப்படை வேலைவாய்ப்பு

**48.** படைப் பணியில் உயிர்நீத்தோர் மற்றும் பணியின் போது, போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. **319** நபர்களுக்கு இதுவரையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

### இளைஞர்களுக்கான பயிற்சி

**49.** தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவத்தில் பல்வேறு பணிகளில் சேரும் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, அலுவலர்களுக்கான புத்தாக்கம் மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த படைப்பணித் தேர்விற்கு தயாராகும் பொருட்டு **26** முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு **2018–2019**ம் வருடத்தில் முன் பயிற்சி இரண்டு கட்டமாக ரூ.**2.69** இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த படைப் பணிகளுக்கான நுழைவுத் தேர்விற்கு தயாராகும் பொருட்டு பிரத்தியேகமாக இணையதளம் www.exweletutor.com ஆரம்பிக்கப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

### முன்னாள் படைவீரர்களின் குடும்பத்தைச் சார்ந்த மகளிருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

**50.** முன்னாள் படைவீரர்களின் குடும்பத்தைச் சார்ந்தோர்களுக்கு தையற்பயிற்சி அளிக்கும் பொருட்டு வேலூார் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையல் அலகு செயல்பட்டு வருகிறது.

இந்த தையல் அலகுகளில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர்களின் விதவை / மனைவி / திருமணமாகாத மகள் / திருமணமாகாத சகோதரிகள் / விதவை மகள் / விவாகரத்தான மகள் மற்றும் விவாகரத்தான சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாத கால தையற்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சி உதவித் தொகை நாளொன்றுக்கு ரூ.50/–ஆகவும், கச்சாப் பொருள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,000/– ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு ஒரு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2018–2019–ம் ஆண்டில் ரூ.13,67,548/– செலவிடப்பட்டுள்ளது. 41 பயிற்சியாளர்கள் பயன் பெற்றனர்.

<u>கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு</u>

**51.** முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு பொறியியல் படிப்பிற்கு–150, மருத்துவ படிப்பிற்கு–10, பல் மருத்துவப் படிப்பிற்கு–1, செவிலியர் (இளங்கலை) படிப்பிற்கு–4, செவிலியர் பட்டயப் படிப்பிற்கு–60, ஆசிரியர் (இளங்கலை) படிப்பிற்கு ஒவ்வொரு அரசு மற்றும் நிதியுதவிபெறும்

கல்லூரியிலும்–1, ஆசிரியர் பட்டயப் படிப்பிற்கு–132, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பிற்கு–80, கலை மற்றும் அறிவியல் இளங்கலை பட்டப் படிப்பிற்கு ஒவ்வொரு கல்லூரியிலும்–6, தொழிற் பயிற்சி படிப்பிற்கு ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும்–5 இடங்களும் மற்றும் இளங்கலை சட்டப் படிப்பிற்கு–1 சதவிகிதமும் இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்</u>

**52.** முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிப்பது அரசின் கொள்கையாக உள்ளது. சுய வேலை வாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15 இலட்சம் வரையிலான கடன்களுக்கு 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2018–2019–ஆம் ஆண்டு இத்திட்டங்களின் மூலம் 547 முன்னாள் படைவீரர்களுக்கும், 23 சுய உதவிக் குழுக்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.65,70,584/– மானியமாக வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

படைவீரர் மாளிகை / முன்னாள் படைவீரர் மையம் / முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

**53.** நலத் திட்டங்களுக்கான நிதிகளைத் திரட்டும் பொருட்டு வணிக வளாகம் / அலுவலக வளாகத்துடன் கூடிய படைவீரர் மாளிகை, முன்னாள் படைவீரர் மையம், முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம் ஆகியவை நல நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் திரட்டப்படும் நிதி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதியில் சேர்க்கப்படுகிறது. 2018–2019–ஆம் ஆண்டில் இச்சொத்துக்கள் மூலம் ரூ.3,37,72,105/– வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

மின் ஆளுமைத் திட்டம் :

**54.** முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசிய தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுமைத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையரின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கணினியில் நேரடியாகப் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல்

உள்ளிட்ட பணிகள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்கல் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கான வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் மின் ஆளுமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பாக ஆண்டுதோறும் கொடி நாள் மலர் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டு வருகிறது. இம்மலரில் முன்னாள் படைவீரர்களுக்கான நலத்திட்டங்கள் மற்றும் சலுகைகள் பற்றிய விரிவான தகவல்கள் வெளியிடப்படுகிறது.

முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பாக உள்ள திட்டங்கள் மற்றும் சலுகைகள் பற்றிய பிரசுரங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டு, முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலம் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

**55.** தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள், மறு வேலைவாய்ப்பு பெற விழையும் காலகட்டத்தில் அனைத்து

உதவிகளையும் நல்குவதற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) **1986–ல்** நிறுவப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசு துறைகளில் ஒப்பந்த அடிப்படையில் மத்திய மறுவாழ்வு இயக்ககம் நிர்ணயம் செய்த ஊதியம் அல்லது தமிழ்நாடு குறைந்தபட்ச ஊதியத்தில் முன்னாள் படைவீரர்கள் துரிதமாக பணியிடங்களில் சேர இக்கழகம் உதவுகிறது. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் பதிவு செய்த முன்னாள் படைவீரர்கள் தொகுப்பிலிருந்து பல்வேறு அரசுத் துறைகள் கோரும் பாதுகாவலர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலியர் உதவியாளர்கள், தீயணைக்கும் பணியாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், காப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மனிதவள முகமையாக செயல்படுகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சிக்காக, நிகர இலாபத்தினை பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில், வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் பணி போன்ற வணிக

நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், முதன்மை நோக்காக முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. **31.03.2019** தேதிய நிலவரப்படி **8,852** முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப, தனித்திறன் வாய்ந்த முன்னாள் படைவீரர்களைக் கொண்டு சிறப்புப் படைப்பிரிவுகளை உருவாக்கி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் சேவை புரிந்து வருகிறது. தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தேவைக்கேற்ப "மின்திருட்டைத் தடுக்கும் படை" ஒன்றை உருவாக்கி அப்படையில் மின்நுணுக்கம் உள்ள **215** முன்னாள் ஹவில்தார்கள் மற்றும் முன்னாள் இளநிலை கமிஷன் அலுவலர்கள் நிலையில் உள்ள முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இச்சிறப்புப் படையினர் ரூ.**174.35** கோடி அளவிற்கு மின் திருட்டைத் தடுப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளனர்.

அதேபோல, தமிழ்நாடு சுற்றுலாத் துறையிலும் முன்னாள் ஹவில்தார்கள், இளநிலை கமிஷன் அலுவலர்கள் மற்றும் உயர் அலுவலர் நிலையில் உள்ள **31** முன்னாள் படைவீரர்களைக் கொண்ட சுற்றுலாக் காப்பாளர்கள் எனும் சிறப்புப் படை செயல்பட்டு வருகிறது.

<u>இதர நலத் திட்டங்கள்</u>

**56.** மேலும், முன்னாள் படைவீரர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) பின்வரும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது :–

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரிபவர்களுக்கு பல்வேறு துறைகளில் தொழிற்சார்ந்த செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை **3,686**, அதற்குண்டான செலவினம் ரூ.**69** இலட்சமாகும்.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் அனைத்து ஒப்பந்தப் பணியாளர்களுக்கும் விபத்து

காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களுக்கு ஓய்வு பெற்ற பின்பும் கணிசமான வருமானம் பெறும் பொருட்டு, ''தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்'' இக்கழக ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு தோராயமாக ரூ.2.65 கோடி செலவில் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது.

## VII. முதலமைச்சரின் தனிப் பிரிவு

**57.** பொதுமக்களின் குறைகளை சீரிய முறையில் களைய முதலமைச்சரின் தனிப்பிரிவு முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் அனைத்து மனுக்களும் எண்ணிடப்பட்டு மனுதாரரின் பெயர், முகவரி மற்றும் கோரிக்கை விபரம் ஆகியவை பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகள் / மாவட்டங்களுக்கு மேல் நடவடிக்கை தொடரும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன. மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினைக் கண்காணிக்கவும், துரிதப்படுத்தவும்

தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு அவர்கள், அனைத்துத் துறைகளிலும் நியமிக்கப்பட்டுள்ள பற்றாளர்களுடன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதை கண்காணித்து வருகிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளும் போதும், அலுவலகம் மற்றும் இல்லத்திலும் நேரடியாக பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்படுகின்றன. மேற்கூறிய மனுக்கள் உள்ளிட்ட தலைமைச் செயலகத்தில் செயல்படும் முதலமைச்சரின் தனிப்பிரிவில் **2018–**ஆம் ஆண்டில் பெறப்பட்ட **2,08,216** மனுக்களில் **2,05,949** மனுக்களும், இணையதளம் (www.cmcell.tn.gov.in) வழியாக பெறப்பட்ட **49,791** மனுக்களில் **49,169** மனுக்களும் இதுவரை தீர்வு செய்யப்பட்டுள்ளன.

**எடப்பாடி கே. பழனிசாமி**
முதலமைச்சர்